# மீட்பின் அன்னை தமிழ் கத்தோலிக்க மறைத்தளம்

# Our Lady of Deliverance Tamil Catholic Mission

மீட்பின் அன்னை மறைத்தளத்தின் 12வது கூட்டம் 17-01-2010 அன்று ஆலயத்தின் சிறிய மண்டபத்தில் 6:45 மணிக்கு பங்குத்தந்தையின் ஆரம்ப செபத்துடன் ஆரம்பமானது. அன்றைய தினம் அருட்சகோதரி கார்மேல், திரு. சூசைமாணிக்கம், திரு. அம்புறோஸ் அவர்கள் சமூகம் தரவில்லை. கடந்த இரண்டு மாதக் கூட்ட அறிக்கை செயலாளர் அவர்களால் வாசிக்கப்பட்டது. அவற்றில் சில திருத்தங்கள் செய்த பின்னர் 15-11-2009 கூட்ட அறிக்கையினை திரு. யூலியன் அவர்கள் முன்மொழிய, திரு. கலிஸ்ரா அவர்கள் வழிமொழிந்தும், 12-12-2009 அன்று பங்குச்சபையும், நிர்வாகசபையும் இணைந்து நடாத்திய கூட்ட அறிக்கையினை திரு. சார்ள்ஸ் அவர்கள் முன்மொழிந்து, திரு. அல்பிரட் அவர்கள் வழிமொழிய அவ்வறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

உதவும் கரங்கள் இல்லத்தில் ஒரு பிள்ளையைப் பராமரிப்பதற்கு மாதம் 35 டொலர்கள் தேவைப்படுகின்றன என்றும், 25 பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு உதவுபவர்கள் பெயர்களைத் தந்துதவுமாறு பங்குமக்களிடம் கேட்கப்பட்ட பொழுது, 35 குடும்பங்கள் உதவமுன்வந்த தாராள குணத்தை எமது பங்குத்தந்தை பாராட்டினார். மேலும், பிள்ளைகளை ஒரு குறிப்பிட்ட ஆண்டு வரை தொடர்ச்சியாகப் பராமரிக்க வேண்டியுள்ளமையால், அதற்கென ஓர் சிறப்புக்குழு ஒன்றை நியமிக்கவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. அந்த வகையில் பங்கச்சபையிலிருந்து திரு. யூலியன் அவர்களும், திரு. றொபின் அவர்களும் அதற்கு உதவ முன்வந்தனர். அதேபோன்று நிர்வாகசபையில் இருந்து ஓய்வுபெற்ற இருவரையும், பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு முன்வருபவர்களிலிருந்து இருவருமாக அச் சிறப்புக் குழு அமையவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. இம் முயற்சியினைத் தொடர்ந்து முன்னெடுக்க ஒரு வருடத்துக்காவது எமது பங்குத் தந்தை எம்முடன் இருந்து உதவவேண்டும் என்றும், குறிப்பிட்ட காலத்துக்குள் பங்குத்தந்தை இடமாற்றம் செய்யப்பட்டால் இத்தேவையை எமது மேற்றிராசனத்துக்கு எடுத்துக்கூறி ஆவன செய்யத் தயாராவுள்ளோம் எனவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

மேலும், ஆங்கில பாட ஆசிரியையின் போக்குவரத்துப் பற்றிக் கலந்துரையாடப்பட்ட பொழுது, திரு. அலெக்ஸ் அவர்கள் கல்விக்குப் பொறுப்பாக இருக்கும் திரு. வினிபிரட் அவர்களுடனும், ஆங்கிலம் பயிலும் மாணவர்களின் பெற்றோரிடமும் கலந்துரையாடி அதற்கான ஒழுங்குமுறைகளை மேற்கொள்வதாகக் கூறினார். பெரியவர்களின் ஒன்றுகூடல் ஒவ்வொரு சனிக்கிழமையும் இடம்பெறுவதால், அவர்களுக்குரிய போக்குவரத்து வசதிகள் தேவையாக இருப்பதாக திருமதி கலிஸ்ரா தவராஜா அவர்கள் குறிப்பிட்டபோது, திரு. யூலியன் அவர்கள் நான்கு பேருக்கு ஆறு மாதங்கள் வரையில் உதவிசெய்வதாக முன்வந்தார்.

மேலும், மறைத்தள வாழ்த்து மடல்கள் இன்னமும் பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு அஞ்சல் மூலம் அனுப்பிவைக்கவேண்டும் எனவும், அத்துடன் ஆலயத்துக்கு wax போட வேண்டியிருப்பதால் அதை உயிர்ப்பு ஞாயிறு தினத்துக்கு முன்னும், கீழே மார்ச் விடுமுறையிலும் செய்துமுடித்தால் நலம் எனவும் பங்குத்தந்தை கூறினார். மண்டபங்கள் வாடகைக்கு விடுவது தொடர்பான அலுவல்கள் சிறப்பாக நடைபெறுகின்றது என்றும், சிலர் குறிப்பிட்ட தொகைக்குக் குறைவாக அதை வாடகைக்கு கேட்டாலும், குறிப்பிட்ட தொகைக்குக் குறைவாக அதை வாடகைக்கு விடமுடியாது எனவும் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் மண்டபத்திற்கான பதிவுப்பத்திரம் புதிதாக அச்சிடவேண்டும் என்றும் திரு. அமிர்தநாதர் அவர்கள் கூறினார்.

பங்குச்சபை உறுப்பினர்களோ, நிர்வாகசபை உறுப்பினர்களோ, வேறு எந்தப் பங்குப் பணியாளர்களோ தங்கள் வாக்குறுதிகளை மீறி பங்குத்தந்தையுடன் தகாத வார்த்தைப் பிரயோகம் செய்யுமிடத்து அதற்கான நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பங்குத்தந்தைக்கு உண்டு, என்றும், வழிபாடுகள் பற்றிய அறிவித்தல், மாற்றங்கள் செய்வதற்கு பங்குத்தந்தைக்கே முழுஉரிமையும் உண்டு என்பதும் வலியுறுத்தப்பட்டது. ஒளிவிழா சிற்றுண்டிச்சாலைக் கணக்குகள் இன்னமும் ஒப்படைக்கப்படவில்லை என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது.

இறுதியாக, திரு. அல்பிரட் ஞானராஜா அவர்களின் இறுதிச் செபத்துடன் கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

அருட்.தந்தை அன்றூ தவராஜசிங்கம்
பங்குத்தந்தை
மீட்பின் அன்னை மறைத்தளம்

திரு.நெல்சன் ஆரோக்கியநாதன்
செயலாளர் (பங்குச்சபை)
மீட்பின் அன்னை மறைத்தளம்